www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi11T

தென்காசி மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

29-01-2025

வகுப்பு 11

பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1) ''கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்'' - அடிமோனையைத் தெரிவு செய்க.

அ) கபாடபுரங்களை - காவு கொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்

இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2) நன்னூல் எத்தனை அதிகாரங்களாக பகுக்கப்பட்டுள்ளது?

அ) 133 ஆ) 5 இ) 2 ஈ) 4

3) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:**

1. வெள்ளி வீதியார் - அ) புறநானூறு
2. அண்ணாமலையார் - ஆ) சி.சு. செல்லப்பா
3. வாடிவாசல் - இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

i) அ, ஆ, இ, ஈ ii) ஆ, ஈ, அ, இ iii) இ, ஈ, ஆ, அ iv) இ, ஈ, அ, ஆ

4) ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ........... என்பதாகும்.

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

5) **சரியானதைத் தேர்ந்தெடுக்க:**

அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம்

இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்

i) அ, ஆ, இ - சரி; ஈ - தவறு ii) ஆ, இ, ஈ - சரி; அ - தவறு

iii) அ, இ, ஈ - சரி; ஆ - தவறு iv) அ, ஆ, ஈ - சரி; இ - தவறு

6) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து - நினை

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

7) ''வந்தேமாதரம்'', ''ஜன கண மன'' என்ற பாடல்களை நவீன வடிவில் இசையமைத்தவர்

அ) ஏ.ஆர். இரகுமான் ஆ) இளையராஜா

இ) கங்கை அமரன் ஈ) எம்.எஸ். விஸ்வநாதன்

8) 'ஜனப்பிரளயம்' என்ற வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

9) 'திருநங்கை' என்ற சொல்லை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்

அ) பிரித்திகா யாஷினி ஆ) நர்த்தகி நடராஜ்

இ) வைஜெயந்திமாலா ஈ) ஜோயிதா மோண்டல்

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



10) கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு
அ) பெயர் மரபு ஆ) வினை மரபு இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்

11) Sailor - என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) ஆவணம் ஆ) ஒப்பந்தம் இ) மாலுமி ஈ) இனக்குழு

12) துன்பப்படுபவர் ............
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

13) 'அறிவும் அழகும் இளமையும் வாய்த்தவன்' - யார் யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

14) ''வான் பொய்த்தது'' - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×2=6**

15) 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

16) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

17) சீர் தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

18) கற்றேன் என்பாய் கற்றாயா? என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

20) நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாக தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

21) ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**
அ) முறையறிந்து ஆ) கற்பொடி

24) **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக:**
அ) மறுத்து ஆ) பிரிந்தோர்

25) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:**
அ) உற்சாகம் ஆ) விசா

26) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
வலி, வளி, வழி

27) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**
அ) எட்டுவரை **(அல்லது)** ஆ) வைகை

28) **கலைச்சொல் எழுதுக:**
அ) Harvesting ஆ) Value Education

29) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



30) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

அ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமல் போவாது.

ஆ) தேர்வு எழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

31) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

32) புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

33) மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

34) இன்குலாப், ''உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்'' - எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

35) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

36) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

37) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

38) தாமஸிகம் என்றால் என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

39) சொற்பொருள் பின்வரும் நிலையணி

**(அல்லது)**

உவமையணியை விளக்குக.

40) **கீழ்க்காணும் தலைப்பில் 10 வரிகளுக்கு மிகாமல் கவிதை ஒன்றை எழுதுக:**

மழை **(அல்லது)** இயற்கை

41) **தமிழாக்கம் தருக:**

1. Work while you work and play while you play.
2. Knowledge rules the world.
3. Education is the most powerful weapon, which you can use to change the world.
4. Culture does not make people; people make culture.


42) **இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எழுதுக:**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
    சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
    பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
    எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
    நிச்சயம் சுதந்திரம் அதுவேண்டும்.

- **நாமக்கல் கவிஞர்**

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

43) **கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக:**




சிவக்குமார் .மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப,
வல்லம் 627809
தென்காசி. மாவட்டம்

43) **செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா:**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் ''பல்கலைப் புலமை'' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ''தமிழ்கெழு கூடல்'' என்றவிடத்திலும் ''கலைப்புலமை'' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது.

முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் ''தமிழ்மாலை'' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

**வினாக்கள்:**

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **3×6=18**

44) காவடிச்சிந்து ஒரு வழிநடைப் பாடல் - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.

**(அல்லது)**

''அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்'' - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

45) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

கல்லும் கதை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

**(அல்லது)**

நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47) அ) 'உண்டால் அம்ம ...........' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

ஆ) 'விடற்கு' என முடியும் திருக்குறளை எழுதுக.

----------